**தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம் - 2018**

---

தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆந் திகதிய 2000001447 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் XI ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களின் உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,502.08 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.40 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349.30 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.77 மில்லியனை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் நிதியளிப்புச் செய்வதற்கு இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 5,152.78 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

04 பங்கேற்பு கடன் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக நிதி வசதிகளினை வழங்குதல் மற்றும் தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை, இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளினை வழங்குவதற்கு 03 மூலக்கூறுகளினை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கொண்டிருந்தது. ஆகையினால், மீள்நடுகை நோக்கங்களுக்காக காலி, மாத்தறை, இரத்தினபுரி, பதுள்ளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் காணப்படும் தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் மற்றும் சில நடுகை நோக்கங்களுக்காக அம்பாறை மற்றும் மொனராகலையில் இறப்பர் நிலவுடமையாளர்களுக்கு உதவியளிப்பதற்கு செயற்திட்டத்தினால் துணைத் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 வரை மேலே குறிப்பிடப்பட்ட 05 மாவட்டங்களில் 3,875 ஹெக்டேயரில் தேயிலை மீள்நடுகைக்காக சிறுநிலவுடமை விவசாயிகளுக்கு அனுமதிப்பத்திரங்களினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2,382 ஹெக்டேயார் காணிக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த தேயிலை சிறுநிலவுடையாளர்களுக்கு ரூபா 348 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிப்படையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, மீள்பயிரிடல் நோக்கத்திற்காக 738 ஹெக்டேயர் தேயிலைக் காணிகள் மாத்திரம் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட மாட்டாது. | தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது மீள்பயிரிடல் இலக்குகளினை செயற்திட்டத்தினால் அடைந்து கொள்வதற்கு முடியாது காணப்பட்டது. மீள்பயிரிடல் நிகழ்ச்சித் திட்டத்தினை துரிதப்படுத்தும் பொருட்டு, கைகளிலான காணி அளவீடுகளுக்குப் பதிலாக, ஜிபிஎஸ் தொழில் நுட்பத்துடனான தேயிலை பரிசோதகர்களினை செயற்திட்டம் ஈடுபடுத்தியிருந்தது. | வரிசை அமைச்சு மற்றும் தேயிலை சிறுநிலவுடைமை யாளர்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கிடையே முறையான ஒருங்கிணைப்பு பேணப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கண்டி மாவட்டத்தில் 23.85 ஹெக்டேயர் தேயிலை மீள்நடுகை நோக்கத்திற்காக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ரூபா 3.58 மில்லியன் வெளிப்படையான செலுத்துகைகளினைப் பெற்றிருந்த 109 ஏனைய தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் அவர்களின் பயிர்ச்செய்கையினை தொடர்ந்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடைந்து கொள்ளப்பட வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். மானியங்களின் செலுத்துகைகளினை துரிதப்படுத்துவதற்கு மாவட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் துரிதமாக நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப் பட்டிருக்கின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பெறப்பட்ட தகவலின் பிரகாரம், கண்டி மாவட்டத்திலுள்ள 331 தேயிலை சிறுநிலவுடமையாளர்கள், தேயிலை பரிசோதனையாளர்களின் பரிந்துரைகளினைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் காரணமாக காணி தயார்ப்படுத்தல் செயற்பாடுகளினைப் பூர்த்தி செய்த பின்னர்கூட 47.23 ஹெக்டேயரில் தேயிலை மீள்பயிரிடலுக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைப் பணங்களின் தவணைப்பணங்களினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | மானியங்களின் செலுத்துகையில் தாமதத்திற்கு சாத்தியம் காணப் படுகின்றமை | மானியங்களின் தவணைப் பணங்களினை விடுவிப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப் படுகின்றது | செயற்திட்ட நடவடிக்கைகளினை வினைத்திறனாக அமுல்படுத்து வதற்காக போதியளவான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் கீழ் இறப்பர் மீள்பயிரிடல் நோக்கங்களுக்காக தயார்ப்படுத்தப்பட்ட மஹா ஓயா பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் வரப்பிட்டிய பிரதேசத்திலுள்ள 17.81 ஹெக்டேயர் காணிகள் நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை, | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைந்துகொள்ள முடியாது காணப்படுகின்றது. | ஏற்றுக் கொள்கின்றோம். நட்டத்தினை இழிவளவாக்குவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படையான செலுத்துகைகளினை விடுவிப்பதற்கு முன்னர் சுற்றுச்சூழல் விடயங்களினைக் கருத்திற் கொள்ள வேண்டுமென வேண்டப்படுகின்றது. மேலும், நட்டங்களினை இழிவளவாக்கு வதற்கு ஏனைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. ஆகையினால், 22 சிறுநிலவுடமையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.25 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிப்படையான செலுத்துகைகள் பயனற்றதாகியது. மேலும், மஹா ஓயா மற்றும் உஹன பிரதேச செயலகப் பிரிவுகளில் 65 சிறுநிலவுடமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட 41.29 ஹெக்டேயார் இறப்பர் பயிர்ச் செய்கை காட்டு யானைகளினால் அழிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.89 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிப்படையான செலுத்துகைகள் பலனற்றதாகியது. மேலும், தமன மற்றும் லகுகலயில் 12 ஏனைய சிறுநிலவுடமையாளர்களினால் 10.54 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் பயிர்ச்செய்கைகூட பிரதேசத்தில் நிலவிய கடுமையான வறட்சி காரணமாக, அழிக்கப்பட்டிருந்தது. | | | அரசாங்க முகவர்களுடன் முறையான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கு வேண்டப்படுகின்றது. |
| (உ) | செயற்திட்டத்தின் பிரதேசங்களில் வசிக்கின்ற பயனாளிகளின் சமூக மற்றும் பொருளாதார பின்னனி தொடர்பாக தகவல்களினை சேகரிப்பதற்கு ரூபா 6.5 மில்லியன் கிரயமொன்றில் 2018 ஒக்தோபர் 31 இல் செயற்திட்டத்தினால் அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்று பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | கணக்கெடுக்கப் பட்ட தகவல்களினை அக்கறையுடைய தரப்பினர்களின் நலன்களுக்காக வினைத்திறனாக பயன்படுத்த முடியாதிருந்தது. | மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு நோக்கங்களுக்காக பொருத்தமான தகைமையுடைய நபர்களினை தெரிவு செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. | அடிப்படைக் கணக்கெடுப்பின் கிரயத்தினைக் கருத்திற்கொள்ளும் போது, நிபுணத்துவம் வாய்ந்த நபரிடமிருந்து சேவையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் கணக்கெடுக்கப்பட்ட தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| எவ்வாறாயினும், நடாத்தப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | | | வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 2.2 குறைப்பயன்பாட்டுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், உள்ளூர் மூலக்கூறுகளின் கீழ் ரூபா 500 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளும் வெளிநாட்டு மூலக்கூறுகளின் கீழ் ரூபா 900 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளும் செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், உள்ளூர் மூலக்கூறுகளின் கீழ் 321 மில்லியன் கிரயமொன்றில் செயற்பாடுகளும் அதேவேளை வெளிநாட்டு மூலக்கூறுகளின் கீழ் ரூபா 825.91 மில்லியன் கிரயமொன்றில் ஏனைய செயற்பாடுகள் மாத்திரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் உள்ளூர் மூலக்கூறுகளின் கீழ் ரூபா 163.24 மில்லியன் தொகையொன்றும் வெளிநாட்டு மூலக்கூறுகளின் கீழ் ரூபா 713.59 மில்லியன் தொகையொன்றும் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நிதிகளினைப் பயன்படுத்துதல் தொடர்பான இலக்குகளினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்தும் பொருட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தினைப் பின்பற்றுவதற்கு மற்றும் நாட்டில் காணப்படுகின்ற சிறுநிலவுடமை தோட்டங்களின் உற்பத்தி இயலளவினை அதிகரிக்கும் பொருட்டு பங்களிப்புக்களினை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**2.3 மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18 மில்லியன் கிரயமொன்றில் மேற்கொள்ளப்பட்ட அம்பாறையிலுள்ள இறப்பர் செடி நாற்று மேடையின் அபிவிருத்தி வேலைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வன வள பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் போன்ற தொடர்பான தொடர்புடைய அதிகாரசபைகளிடமிருந்து முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமை காரணமாக, கைவிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, மேற்குறித்த 02 மாவட்டங்களில் செயற்திட்டத்தினால் வருடாந்தம் 250,000 இறப்பர் செடிகளினை பயிரிடும் இலக்குகள் தொடர்ந்தும் ஐயத்திற்குரியதாகக் காணப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினை அமுல்படுத்த முடியாதுள்ளது. | அபிவிருத்தி வேலைகள் கமநல சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்றதுடன், அதனை 2019 ஒக்தோபர் இற்கு முன்னர் பூர்த்தியாக்குவதற்கான வேலைகளினை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்விகளினை எதிர்கொள்வதற்கு இறப்பர் செடிகளின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 செப்தெம்பர் 04 இல் ரூபா 85 மில்லியன் கிரயமொன்றில் செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்த 10 மோட்டார் கார்கள், சாரதிகளினை ஆட்சேர்ப்புச் செய்வதில் தாமதங்கள் காரணமாக, 2018 திசெம்பர் 31 வரை 04 மாதங்கள் காலப்பகுதிக்கு தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. மேற்குறித்த 04 மாதங்கள் காலப்பகுதியின் போது ரூபா 2.64 மில்லியன் கிரயமொன்றில் மோட்டார் வேன்களினை வாடகைக்கமர்த்துவதற்கு | பொது நிதி வீணாக்கப்பட்டமை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை தொடரும் பொருட்டு சாரதிகளினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்பட்ட தவிர்க்கமுடியாத நிலைமைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது. ஆகையினால், மோட்டார் வாகனங்களினைக் வாடகைக் | நிலைமையினைக் கண்டறிந்து செயற்திட்டத்தின் செயற்பாட்டுக் கிரயத்தினைக் இழிவளவாக்கு வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. | | கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | செயற்திட்டத்திற்குச் சொந்தமான வாகனமொன்று 2018 மார்ச் இல் விபத்தொன்றுக்குள்ளானமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இனால் வேண்டப்பட்டவாறு புலனாய்வுகளினை மேற்கொண்டு நட்டத்தினை அறிந்து அது தொடர்பான பொறுப்புக்களினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்களிலிருந்து மீளுவதற்கான பொறுப்பினை நிறுவுவதற்கு இயலாது காணப்படுகின்றமை | அது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவினால் ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப் பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் அடிப்படையில் ஏனைய குழு இறுதி விசாரணைக்காக நியமிக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |